Regitered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆவணி மீ 09 ஆம் உ சனிக்கிழமை (25 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 4 ஓசை 188

## யாழ்ப்பாணத் தாக்குதல் இந்தியா ஆழ்ந்த கவலை

(புதுடில்லி)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படைகளின் தாக்குதலால் பெருமளவில் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து சிறிலங்கா அரசாங்கத்துக்கு இந்தியா மீண்டும் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருப்பதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இலங்கையில் இனப்பிரச் (4ஆம் பக்கம் பார்க்க)

# காரைநகர் மோதலில் 20 இராணுவம் பலி!

## ஊர்காவற்றுறை இராணுவம் சுற்றி வளைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் கடற்படை முகாமிலிருந்து வெளியேறி தம்பாட்டி என்ற இடத்தில் பாடசாலைக் கட்டிடத்தில் தங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த இருபது சிப்பாய்கள் விடுதலைப்புலிகளின் தாக்குதலால் கொல்லப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஊர்காவற்றுறையில் தரையிறங்கிய இராணுவத்தினர் முன்னேற முடியாமல் ஊர்காவற்றுறை இறங்குதுறைப் பகுதியிலேயே நிலைகொண்டிருக்கின்றனர்.

### அராலியில் படை இறக்கம்

இந்த நிலையில் வேலணை அராலிச்சந்தியில் மூன்று ஹெலிகொப்ரரில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இறக்கப்பட்டுள்ளதாகவும், விடுதலைப் புலிகள் அவர்களைச் சூழ்ந்துள்ளதாகவும், தொடர்ச்சியான சண்டை நடைபெறுவதாகவும் கடைசியாகக் கிடைத்தசெய்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலித் தாக்கு

### நாவற்குழியில்

(நாவற்குழி)

நாவற்குழிப் பாலப் பகுதியில் நேற்று மதியம் கடுமையான ஹெலிகொப்ரர் தாக்குதல் நடாத்தப்பட்டது.

நேற்று மதியம் பன்னிரண்டு முப்பது மணியளவில் நாவற்குழிப் பாலப் பகுதியில் அவ் வீதியால் பயணம் செய்த பொதுமக்கள்மீது கடுமை

(4ஆம் பக்கம் பார்க்க)

### மணியன்தோட்டத்தில் நால்வர் காயம்

(மணியன்தோட்டம்)

மணியன்தோட்டத்தில் ஹெலித்தாக்குதலில் நான்கு பேர் காயம்.

நேற்று யாழ். மணியன் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஹெலித்தாக்குதலில் கரையூர்-ரவி என்பவர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர். (ம)

### பூநகரியில் ஒருவர் மரணம்

(பூநகரி)

பூநகரியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலின் போது பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டார். இச் சம்பவம் பூநகரியிலுள்ள செல்வபுரத்தில் நடந்துள்ளது. (ம)

### சங்குப்பிட்டியில் 4பேர் மரணம்

(பூநகரி)

சங்குப்பிட்டியில் மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். பதினாறு பேர் காயமடைந்தனர்.

பூநகரியிலிருந்து வந்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது கடந்த 22ஆம்திகதியன்று

(4ஆம் பக்கம் பார்க்க)

### கல்முனையில் மூவர் காயம

(கல்முனை)

கல்முனைத்தோட்டப்பகுதியில் நேற்று நண்பகல் மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இக் ஹெலித் தாக்குதலில் ஹில்பட்ராஜ் (08) வினிதாஸ் (05) ஆகிய இருவர் உட்பட மேலும் ஒருவர் காயமடைந்துள்ளனர். (ம)

## ஊர்கா.-வேலணையே நேற்றைய விமானப்படையின் முக்கிய இலக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச்குடாநாட்டில் நேற்றும் தொடர்ந்து சிறிலங்கா போர் விமானங்களும், ஹெலிக்கொப்ரர்களும் இரவும் பகலும் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தன. தாக்குதலின் பிரதான மையம் தீவுப் பகுதியாகவே இருந்தது தீவுப் பகுதியில் ஊர்காவற்றுறை நகரைச் சூழவுள்ள வேலணை, சரவணை, நாராந்தனை, சுருவில் ஆகிய இடங்களில் பெருந் தாக்குதல்கள் இடம்பெற்றன.

வேலணை வங்களாவடிச் சந்தியிலும் மற்றும்தீவுப்பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## நெல், அரிசி விலைகள் கிளிநோச்சியில் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சிறுபோக நெல் விளைந்து அரிவுவெட்டு ஆரம்பித்த இவ் வேளையில் நெல்லின் விலையும், அரிசியின் விலையும் இரு மடங்காக அதிகரித்துள்ளது.

இதனால் வறிய மக்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் 800 ரூபாவிற்குவிற்பனை செய்யப்பட்ட ஒரு மூடை குத்தரிசி படிப்படியாக விலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்கி இரண்டு இந்திய மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து வந்த படகின் மீது நேற்றுக்காலை ஹெலிக்கொப்ரர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதில் மூவர் காயமடைந்தனர். இதில் இருவர் இந்தியர்கள் ஆவர்.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் மண்ணித்தலைமுனை எனுமிடத்தில் வந்துகொண்டிருந்த இந்தியப் படகு ஒன்றின் மீது ஹெலிக்கொப்ரர் கடுமையான துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டது. இறுதியாக ராக்கற் குண்டு ஒன்றும் படகு நின்ற இடத்தை நோக்கி வீசப்பட்டது. இத

(4ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவுத் தாக்குதலால் நித்திரையில் இருந்த 7பேர்காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள ஆறுகால்மடம், பொம்மைவெளி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகள் மீது நேற்று நள்ளிரவு ஹெலிகொப்டரிலிருந்து ஷெல் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் வீடுகளில் ஆழ்ந்த நித்திரையிலிருந்த சிறுவர்கள், பெண்கள் உட்பட

(4ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் வைத்தியசாலை மீது நள்ளிரவு ஹெலித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைமீது சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த ஹெலிக்கொப்டர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்ததினால், வைத்தியசாலையின் மேல்மாடியில் உள்ள சத்திரசிகிச்சை நிலையம், குழந்தைகள்வார்ட், மற்றும் நோயாளர் வார்ட்டுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன. நோயாளர்களும், ஊழியர்களும் பீதியடைந்து பாதுகாப்பான அறைக்குள் பதுங்கிக்கொண்டனர்.

சிறிலங்கா அரசு விதித்திருந்த நிபந்தனைகளுக்கமைவாக வைத்தியசாலை நிர்வாகம் இயங்கிவந்தபோதிலும், விமானப்படையினர் இத்தாக்குதலை மேற்கொண்டதையிட்டு வைத்தியசாலை வட்டாரம் கவலை தெரிவிக்கின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 இராணுவம் பலி 16 பேர் காயம்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பதினாறுபேர் காயமடைந்ததாகவும், சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## பட்டிக்குடியிருப்பில் மோதல்

(பட்டிக்குடியிருப்பு)

பட்டிக்குடியிருப்பில் நேற்று இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட மோதலில் சேதவிபரம் தெரியவில்லை. பின்னர் இராணுவத்தினர் முகாமுக்குப் பின்வாங்கிச் செல்லும்போது மூன்று வீடுகளை எரித்துவிட்டுச் சென்றுள்ளனர். இவ் இராணுவத்தினர் சிலோன் தியேட்டரில் இருந்து வந்தவர்களாவார்கள்.

## சத்தியா வீரமரணம்

(மாங்குளம்)

மாங்குளத்தில் இராணுவத்தினருடனான மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணம் அடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாங்குளம் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையில் ஏற்பட்ட மோதலின் போது இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் சத்தியா

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்தாக்குதலால் வெளியேற்றம்

(புல்மோட்டை)

புல்மோட்டையில் கடந்த 22ஆம் திகதி யன்று இரவு 10 மணிக்குப் பின்னர் சிறிலங்கா ராணுவ முகாமிலிருந்து மக்கள் வாழும் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஷெல்த்தாக்குதலினால் பெருந்தொகையான வீடுகளும், கடைகளும் சேதமடைந்துள்ளன.

இதனால் இருநூறிற்கும் அதிகமான குடும்பங்கள்வெளியேறி புடவைக் கட்டுப் பகுதிக்குஇடம்பெயர்ந்துள்ளனர். இதில் முஸ்லிம் மக்கள் பெரும்பாலானோர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## மண்ணித்தலை அகதிகள் அவதி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் இருந்து அடைக்கலம் புகுந்து மண்ணித்தலையில் அகதிகளாக இருக்கும் மக்களுக்குப் போதிய குடிநீர் உணவு, மருத்துவ வசதியின்மையால் வயிற்றோட்டம், வாந்திபேதி என்பன ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளது. பலர் நோய்வாய்ப்பட்டு அவதிப்படுவதால் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாமல் அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(43)

# விடுதலைப் புலிகளால் முஸ்லிம்கள் பாதுகாக்கப்படுகின்றார்கள்

## - முஸ்லிம்கள் கருத்து

(வவுனியா)

சிறிலங்காஇராணுவ கட்டுப் பாட்டின் கீழ் உள்ள பகுதி களில்தான் முஸ்லிம் மக்கள் தாக்கப்படுகின்றனர். விடுத லைப்புலிகள் இருக்கும் பகுதி களில் முஸ்லிம் மக்கள் பாது காப்பாகவே இருக்கின்றனர். இதைச் சிந்தித்துப் பார்க்கும் போது, முஸ்லிம் மக்கள் தாக் கப்படுவதற்கும், கொலை செய்யப்படுவதற்கும் அரச படையினரே காரணம் என்றே கருதுகிறோம்.

காக்கையன் குளம் என்னும் முஸ்லிம் கிராமத்தில் முஸ் லிம் பிரமுகர்கள் சிலரைச் சந்தித்த போது, அவர்கள் மேற்படி கருத்தைத் தெரிவித் தனர்.

எம். பாரூக் தலைமையில் முஸ்லிம் பிரமுகர்கள் சிலர் ஈழநாதம் நிருபரிடம் மேலும் தெரிவித்ததாவது;

முஸ்லிம் மக்களில் பலர், தமது சொந்தப் பகுதிகளிலி ருந்து இடம் பெயர்ந்து செல் வதற்கு முக்கியமான மூன்று காரணங்கள் உண்டு உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பா டும், விமானத் தாக்குத லும், அரசின் பொய்ப் பிர சாரமுமே காரணங்களாகும். வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ்மக்களுடன் முஸ்லிம் மக் கள்ஐக்கியமாகவேவாழ்கிறார் கள் என்பதை அறிந்தே முஸ் லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அஸ்ரப் அறிக்கை விடவேண்டும் என்றும் தெரி வித்தனர்.

காக்கையன் குளம் கிரா மத்தைச் சேர்ந்த ஒருவரே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வன்னிப் பிரதேச பாராளு மன்ற உறுப்பினராக தெரி வாகி உள்ள போதிலும் அவ ரால் முஸ்லிம் மக்களுக்கு எது வித உரிமைகளும் பெற்றுத் தர முடியவில்லை என்று அவர்கள் மேலும் குறிப்பிட் டனர்.

காக்கையன் குளம் கிராமத் தில் வாழும் முஸ்லிம் மக்க ளில் பலர் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள் என் பதும், இப்பகுதியில் வாழ்ந்து வந்த 288 முஸ்லிம் குடும்பங் களில் சுமார் 20 குடும்பங் களே இடம் பெயராமல் தத்தமது வீடுகளில் தங்கியுள் ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (தி)


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டை யும் (231680764X) மூன்று உணவு முத்திரைகளும் தொலைந்து விட்டன, தயவு செய்து இவற்றை கண்டெ டுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் அவற்றை ஒப்ப டைக்கவும் நியூ. பத்மா ஹோட்டல்,429 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.

(R 594)


## இரண்டாம் கட்ட தற்காப்பு பயிற்சி

(சாவகச்சேரி)

பொதுமக்களின் தற்பாது காப்பிற்கான முதலாவது கட் டப் பயிற்சிகள் அனைத்தும் பூர்த்தியாகின. பயிற்சி பெற்றவர்கள் போக மீண் டும் இரண்டாவது கட்டப் பயிற்சியை, தமிழீழ விடுத லைப் புலிகள் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா ஆரம்பித்து வைத் தார். இதிலும் நூற்றிற்கு அதிகமானோர் கலந்து கொண்டனர். (35)

## செஞ்சிலுவைக்கு புதிய வாகனம்

(கொழும்புத்துறை)

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கக் கிளைக்கு அண்மை யில் புதிய பிக்கப் வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது'

## மகோற்சவம்

(நீர்வேலி)

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவிலின் வரு டாந்தஉற்சவம் இன்று கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி றது. எதிர் வரும் 3ஆம் திகதி தேர்த்திருவிழாவும்4ஆம் திகதி தீர்த்தமும் நடைபெறும்.

## நெருக்கடியைப் பயன்படுத்தி விலையை அதிகரிக்கவேண்டாம்

### - கில்மன்

(பூநகரி)

யுத்தகால நிலையைப் பயன்படுத்தி வர்த்தகர்கள் அத்தியாவசிய உணவுப்பொ ருட்களின் [விலையை அதி கரிக்க வேண்டாம் என விடு தலைப் புலிகள் மக்கள் முன் னணி அரசியற் பொறுப் பாளர் கில்மன் வர்த்தகர் களைக் கேட்டுக் கொண்டுள் ளார்,

பூநகரி வடக்கில் சிற்றூர வைகளுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டுபேசிய கில்மன் ''யுத்த கால நிலைமையைப் பயன்படுத்தி நொந்துபோயி ருக்கும் மக்களின்மேல் மேலும் விலைப் பளுவை சுமத்தி பதுக்கி வைத்தும் கொள்ளும் வர்த்தகர்களுக்காகவே சில அத்தியாவசியப் பொருட் களுக்கு கட்டுப்பாட்டுவிலை விதித்துள்ளதாக'' தெரிவித் தார்.

மக்கள் உயிரை மட்டும் பிடித்துக்கொள்ளக்கூடிய அத் தியாவசிய பொருட்களுக் காவது கட்டுப்பாட்டுவிலை நிர்ணயிக்கப்பட்டு அவற்றின் கீழ் பொருட்களை விநியோ கிக்க வர்த்தகர்கள் முன்வர வேண்டும் எனவும், இவர் களை கண்காணிக்க சிற் றூரவை உறுப்பினர்கள் முன் வர வேண்டும் எனவும் கேட் டுக்கொண்டார்.

## தேயிலை வர்த்தகம் பாதிக்கும்

(கொழும்பு)

ஈராக், சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகளும் சிறி லங்காவின் தேயிலையைக் கொள்வனவு செய்வதை நிறுத்துமாகில் சிறிலங்காவின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகும் என இலங்கையின் அமைச்ச ரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித் தார்.

தற்போதைய நிலையில் ஈராக் தேயிலையைக் கொள் வனவு செய்யும் நிலையில் இல்லை எனவும் அவர் தெரி வித்தார்.

## சில கிளைகள் முன்மாதிரி

(ஈச்சமோட்டை)

தற்பொழுது ஊரடங்குசட் டத்தையும் ஹெலி, பொம்மர் தாக்குதலையும் பொருட்படுத் தாது சில பல. நோ. கூ. சங் கங்கள் மக்களுக்கு அத்தியா வசியப் பொருட்களை பங் கீட்டு அடிப்படையில் விநி யோகித்து வருகின்றன. மக் கள் பாதுகாப்பாக நின்று பொருட்களை வாங்குவதை அவதானிக்க முடிந்தது. (43)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்
03
12
1957



மரணம்
25
08
1989

### அழகு யேசுராசா

பெற்ற மனம் தத்தளிக்க
மனைவி, பிள்ளைகள் மனம் பேதலிக்க
உடன் பிறந்தவர்கள் தனித்திருக்க
உடன் பிறவா சகோதரர்கள், நண்பர்கள்
தவித்திருக்க
நாம் நித்தம் வழிமேல் விழிவைத்து காத்திருக்க
நீ மட்டும் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்த
மாயமென்ன?

மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

பெற்றோர், மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்,
நண்பர்கள்.

(R. 589)


ஓ……
கார் மேகங்களே
சற்றே நில்லுங்கள்
இவ்வளவு வேகமாக
எங்கே செல்கின்றீர்கள்
மரணித்த
இருபத்தி எட்டு வேங்கைகளுக்கு
இறுதி அஞ்சலி
செலுத்தப்
போகின்றீர்களா?
அவர்கள்
எதற்காக இறந்தார்கள்?
என்பது
உங்களுக்குத் தெரியும்
ஏன் ?
அவர்கள்
மரணத்தை அணைத்தபோது
அவர்களை
தன்னுடன் சேர்த்து
வைத்திருந்த
கோட்டை மதில்களுக்கு
கூட தெரியும்
ஓ ..
மேகங்களே!
எங்கள் சகோதரர்களுடன்
நாங்களும்
மரணிப்போம் -- எமது
விடுதலைக்காக!

# கண்ணன் தச்சுத் தொழிற்சாலை

3ஆம் கட்டை ஆனைக்கோட்டை.

(B. 1350)

### சிந்தனைக்கு

உடன்பிறப்புக்கள் போல் இருங்கள்; அன்பில் ஒன்றாய், தூய்மையில் ஒன்றாய், வாய்மையின் ஆர்வத்தில் ஒன்றாய் இருங்கள்.

— கௌதம புத்தர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 25-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# இலக்கு எது?

★ ஊர்காவற்றுறையில் தரை இறங்கிய இராணுவம் அங்கு முதலில் கைதுசெய்த மூன்று தமிழர்களை உயிருடன் தீயிட்டுக்கொளுத்தியது.

★ சின்னஞ்சிறு குழந்தை. வயது மூன்று. உலகில் எந்தப் பிரச்சினை பற்றியும் கவலை தெரியாத அந்தப் பிஞ்சு நண்பகல் பசியைப் போக்க தாயார், பேர்த்தி, சகோதரனுடன் கொஞ்சி மகிழ்ந்தபடி உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தது. சிறிலங்கா விமானப்படையின் ஹெலி தாக்கியதில் அந்தக் குழந்தை சாப்பிட்ட இடத்திலேயே துடிதுடித்து மாண்டது.

★ யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் விமானப்படைத் தாக்குதலில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மாண்டனர்.

★ மிருசுவிலில் விமானத் தாக்குதலுக்கு ஒரு குழந்தை பலி.

இவை நேற்று வெளிவந்த பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்த செய்திகளில் சில.

கடந்த சுமார் இரண்டரை மாத காலமாக இது போன்ற இதைவிடமோசமானசெய்திகளே பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இதுபோன்ற செய்திகள் கொழும்புப் பத்திரிகைகளில் அதிகம் வெளிவரமாட்டா. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனமும் ரூபவாஹினியும் வெளியிடும் செய்திகள் வேறு.

புலிப்படையினர் மீதும் அவர்களுடைய முகாம்கள் மீதுமே விமானப்படை தாக்குதல் நடத்திவருவதாகவும் இலக்குகள் தவறவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அறிவிக்கும் செய்திகளே வானொலியிலும் ரூபவாஹினியிலும் வெளிவரும்.

ஊர்காவற்றுறையிலிருந்தும் மண்டை தீவிலிருந்தும் புலிகளை விரட்டிவிட்டதாகவும் யாழ்ப்பாணத்திலிருந்தே புலிகளை விரட்டப்போவதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்கஅமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்.

சாப்பிட்டுக்கொண்டிருந்த மூன்றுவயதுக் குழந்தையும் வீதியில் சென்றவர்களும் ரஞ்சன் விஜேரத்தினாவுக்குப் புலிகளாகத் தெரிந்தால் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளை விரட்டும் திட்டத்தில் அவர் வெற்றிபெறுவார். யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமல்ல, இலங்கையிலிருந்தே விரட்டுவதில் வெற்றிபெறுவது கஷ்டமல்ல. ஏனெனில் அவர்கள் இப்பொழுது இன அழிப்பைத்தானே செயல் படுத்தி வருகிறார்கள்.

தேசிய பாதுகாப்புநிதி, பாதுகாப்புப்படைகளுக்கும் ஜனாதிபதிக்கும் நல்லாசிவேண்டி ஆலயவழிபாடு, பாதுகாப்புப்படைக்கு சிங்கள இளைஞர்களைத் திரட்டல் போன்ற செயல்கள் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான போராகமாற்றித் தமிழ் இனத்தை அழிக்கும் செயல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சிங்கள மக்கள் முன்னணி என்ற ஓர் அமைப்பு இந்தப்போர் பற்றி வீடியோப் படம் ஒன்றும் தயாரித்து இருக்கிறது.

மீண்டும் சரித்திரம் திரும்புகிறது. தமிழ் - சிங்கள ராஜ்யங்களுக்கிடையில் நடைபெற்ற போர் இப்பொழுது வேறு உருவத்தில் நடைபெறுகிறது.

இந்த நேரத்திலாவது சகலவற்றையும் மறந்து சகல தமிழ் மக்களும் தமிழினத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முன்வரவேண்டியது அவசியம்.

கட்டப்பொம்மனுக்கு ஒரு எட்டப்பன், பண்டார வன்னியனுக்கு ஒரு காக்கைவன்னியன் போல இனியும் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு இடையூறாக, காட்டிக்கொடுப்பவர்களாகத் தமிழினத்தில் எவரும் இருக்கக்கூடாது.

பாண்டவர்கள் ஒன்றாகவே இருந்ததால்தான் கடைசியில் ஐந்து வீடுகள் கேட்டும் கிடைக்காதபோது இறுதியில் நாட்டையே பெற்றவர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

# மேற்கு நாட்டவரை விடுவிக்க ஈராக் மூன்று நிபந்தனைகள்

## ஐ.நா. தூதுவரிடம் தாரிக் அசீன் தெரிவிப்பு

(பாக்தாத்)

குவைற்றிலும், ஈராக்கிலும் இருக்கும் மேலைநாட்டவர்களின் நிலை அமெரிக்காவின் நோக்கங்களை பொறுத்தே நிர்ணயிக்கப்படும் என ஈராக் அறிவித்துள்ளது.

பாக்தாத்திற்கு சென்ற ஐ. நா. மன்ற தூதுவர்களிடம் இது குறித்து சொல்லப்பட்டது.

அத்துடன், மேலை நாட்டவர்களை விடுதலை செய்வதானால், வளை குடாவில் தங்கியிருக்கும் அனைத்து வெளிநாட்டு படைகளும் எவ்வித நிபந்தனையும் இன்றி வெளியேற வேண்டும் எனவும் ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அசீன் கூறியுள்ளார்.

மேலும் ஈராக்கிற்கு விதித்துள்ள பொருளாதாரத்தடை விலக்கப்பட வேண்டும் என்றும், குவைற் நிலைமை பற்றியும், இஸ்ரேல் ஆக்கிரமிப்புப் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் தாரிக் அசீன் கேட்டுக் கொண்டார்.

இதே வேளை குவைற்றிலும், ஈராக்கிலும் இருக்கும் மேலைநாட்டவர்கள் கண்ணியத்துடனும், கௌரவத்துடனும் இருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழரின்

# நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்

(டில்லி)

இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என இந்தியா கூறியுள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுபற்றித் தாம் சம்பந்தப்பட்ட அனைவருடனும் கதைத்துள்ளதாக தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா விமானப்படையின் தாக்குதலால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து தனது கவலையையும் தெரிவித்துக்கொண்டது. பகைமை நடவடிக்கைகளை உடனே நிறுத்துமாறும் கேட்டுள்ளது.

## வளைகுடா பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

# ஜோர்டான் மன்னர் அரபு நாடுகளுக்கு விஜயம்

(அம்மான்)

வளைகுடாப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண வேண்டும் எனக்கூறி அரபுலக நாடுகளுக்கு ஜோர்டான் மன்னர் ஹுசைன் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருக்கிறார்.

இதன் முதன் முயற்சியாக மன்னர் ஹுசைன் யேமனுக்கு சென்றிருக்கிறார். இவரது விஜயத்தின் போது எல்லா அரபுநாடுகளுக்கும் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஜோர்டானுக்குள் குவைற்றில் இருந்தும் ஈராக்கில் இருந்தும் செல்லும் அகதிகளை தடுப்பதற்காக ஜோர்டானின் எல்லைகள் மூடப்பட்டுள்ளது என ஜோர்டான் அறிவித்தது.

ஜோர்டானில் இருக்கும் அகதிகள் தத்தம் நாட்டிற்கு சென்றதன் பிறகே எல்லை திறக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் தமது மக்களை ஜோர்டானில் இருந்து திருப்பி அழைக்கின்றன.

# பூநகரியில் அரிசி விலை 24 ரூபாவாக நிர்ணயம்

(பூநகரி)

பூநகரியில் இருந்து அரிசி நாளாந்தம் கூடுதலான அளவில் வெளிஊர்களுக்கு சென்றுகொண்டிருப்பதால் அரிசியை கொள்வனவு செய்யும் சைக்கிள், லொறி வியாபாரிகள் நாளுக்கு நாள் போட்டியின் காரணமாக விலையை அதிகரித்துக்கொண்டு வருகின்றனர். இதனால் பூநகரியில் அரிசியின விலை கிலோவிற்கு 30 ரூபாவரை உயர்ந்துள்ளது. இப் பகுதி மக்களில் பெரும்பாலானோர் எம்மிடம்செய்து கொண்ட முறைப்பாட்டின் பிரகாரம் நாம் அரிசியின் விலை ஒரு கிலோ 24 ரூபா என்ற விலைக்குகட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இவ் விலையின் பொருட்டு உற்பத்தியாளர்களும் நுகர்ச்சியாளர்களும் ஓரளவிற்கு பாதுகாக்கப்படுகின்றார்கள். இவ்வாறு பிரதேச அலுவலகத்தில் வர்த்தகர்கள் உற்பத்தியாளர்களை அழைத்து வைக்கப்பட்ட கலந்துரையாடலில் பூநகரி வி. பு. ம. முன்னணி அரசியற் பொறுப்பாளர் கில்மன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது சில வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்கிவைத்து கூடிய விலைக்கு விற்று கொள்ளை லாபமீட்ட முற்படுகின்றனர். இதன் பொருட்டு நாம் இங்குள்ள வர்த்தகர்கள் யாவரும் பொருட்களை கொள்வனவு செய்யும் போது எம் மூலமாகவே மேற்கொள்ளவேண்டும். விரும்பிய விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்து விரும்பிய விலைக்கு விற்பனை செய்யமுடியாது. அவ்வாறு இடம்பெறும் போது பொது மக்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினாற் போலாகக் கூடாது என்று தெரிவித்தார் நமது நாடு நமது மக்கள் என்ற மனப்பக்குவம் உடையவர்களாக இருக்க வேண்டும் அப்போதுதான் நாம் குறித்த இலக்கை எம்மால் அடைய முடியும் என்று தெரிவித்தார். மேலும் வர்த்தகர்கள் உற்பத்தியாளர்கள் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

## பஸ்கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் போக்குவரத்துச்சபை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் பஸ்கட்டணங்களை அதிகரித்துள்ளது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாம். ஒரு ரூபாய் ஐம்பது சதமாக இருந்த கட்டணம் இரண்டுரூபாவாகவும் இரண்டு ரூபாய் கட்டணம் மூன்று ரூபாவாகவும் அதிகரிக்கப்படுகிறது.

## ஈராக்குடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

குவைத்தில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்தின் செயற்பாடு பற்றி ஈராக்குடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படுவதாக ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் ஆலோசகரான பிராட்மன் வீரக்கோன் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## நோயாளர் வெளியேற்றம்

(பருத்தித்துறை)

செவ்வாய்க்கிழமை புலோலிப் பகுதியில் நடைபெற்ற பொம்மர், ஹெலித்தாக்குதல்களையடுத்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை சத்திர சிகிச்சைக்கூட யன்னல் கண்ணாடிகளும் நொறுங்கி உள்ளன.

இவ் வைத்தியசாலையில் இருந்து நோயாளிகள் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வெளியேறி வருகின்றனர். வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் பதட்டநிலையே நிலவுகின்றது. (25)

## சிற்றூரவை கண்காணிப்பு

(பருத்தித்துறை)

தற்போதைய நெருக்கடி நிலையில் மக்களுக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருள்கள் விநியோகம் சிறப்பாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை புலோலி மேற்கு சிற்றூரவை கண்காணித்து வருகிறது,

அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களுடன் இணைந்து சிற்றூரவை செயற்பட்டு வருகின்றது. இந்நடைமுறையினால் இப்பகுதி மக்கள் இலகுவாகத் தங்கள் பங்கீட்டுப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர், (25)

## இணக்க மன்றுகள்

(வவுனியா)

தற்போது இடம் பெற்று வரும் யுத்த நிலைமையிலும் வவுனியா மாவட்டத்தில் இணக்கமன்றுகள்செயல்பட்டு வருகின்றன. சாஸ்திரி கூழாங்குளம், கல்மடு, இரணை இலுப்பைக்குளம் போன்ற இடங்கள் உட்பட ஆறு இடங்களில் இணக்க மன்றுகள் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

# 850 ஊழியர்களில் 20 பேர் மட்டுமே வரும் யாழ்.போதனாவைத்தியசாலை

## மானிப்பாயில் நோயாளர் படும் அவஸ்தை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனாவைத்தியசாலையில் பெரும் ஊழியர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வைத்திசாலையின் அன்றாட அலுவல்கள் நடைபெறுவதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கடமைக்குவரும் சில ஊழியர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியும் உள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை என்னூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட ஊழியர்களைக்கொண்டு இயங்கி வந்தது. ஆனால் மானிப்பாய்க்கு மாற்றப்பட்ட பின் இயங்கி வரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு தற்பொழுது இருபதிற்கும் உட்பட்ட ஊழியர்களே தினமும் கடமைக்கு சமுகமளிக்கின்றனர்.

யாழ் நகரில் தொடர்ந்து இயங்க முடியாத நிலையில் இவ்வைத்தியசாலை பாதுகாப்பு நிலைமை கருதி மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்த பல கட்டில்கள், மருத்துவ சாதனங்கள் இங்கு மாற்றப்பட்டதுடன், ஊழியர்கள் சகலரும்கூட இங்கு கடமைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.


தற்போது யாழ் மாவட்டத்தில் பிரதான வைத்தியசாலையாக இயங்கி வரும் இவ்வைத்தியசாலைக்கு தினமும் பல பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான அவசர நோயாளர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். இந்நோயாளர்களை கவனிப்பதற்கும், சிகிச்சையளிப்பதற்கும் போதியளவு ஊழியர்கள் இல்லாததினால் பெரும் சிரமத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

தினசரி இவ்வைத்தியசாலைக்கு பதினைந்திற்கும் இருபதிற்கும் உட்பட்ட ஊழியர்களே கடமைக்கு சமுமளிக்கின்றனர், சிலவேளைகளில் அதிகமானோர் வந்தாலும் உடனடியாக கையொப்பமிட்டபின்னர் தலைமறைவாகி விடுகின்றனர். மேலும் சிலர் நேரத்துடன் சென்றுவிடுகின்றனர். இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் சகலஊழியர்களுக்கும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட பின்னரும் இவர்கள் இவ்வாறு சற்றும் பொறுப்பற்ற முறையில் நடப்பதையிட்டு வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மேலும் குறிப்பிட்ட சிலர் மட்டுமே கடமைக்கு சமுகமளிப்பதனால் இவ் ஊழியர்களுக்கு மாற்றுஊழியர்கள் இல்லாமையால் கடமையில் உள்ளவர்களே ஒய்வின்றி தொடர்ந்தும் கடமைசெய்ய வேண்டி ஏற்படுகின்றது.

## மத்திய அரசு 4 கோடி ரூபா வழங்கியது

இலங்கைத் தமிழ் அகதிகள் செலவிற்கென தமிழ்நாட்டு அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் கோரிய 10 கோடி ரூபாவிற்கு மத்திய அரசாங்கம் இதுவரை 4 கோடி ரூபா கொடுத்துள்ளது.




## சங்குப்பிட்டி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்குப்பிட்டியில் ஸ்ரீலங்கா விமானப்படையின் ஹெலிகொப்டர் மேற்கொண்ட கடுமையான தாக்குதலினால் நான்குபேர் கொல்லப்பட்டனர். மேலும் பதினாறுபேர் காயமடைந்துள்ளனர். (ம)

## நாவற்குழி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யான ஹெலிகப்ரர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அப்பாதை சிறிது நேரம் தடைப்பட்டது ஆனால் இத்தாக்குதலில் எவரும் காயமடைய வில்லை. (லோ)

## யாழ்ப்பாணத்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாதென்றும் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்றும் இந்தியா மீண்டும் சிறிலங்கா அரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

## குடாநாட்டு மீதான தாக்குதல் அரசியல் கட்சிகளுக்கு கவலை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் தற்போதய நெருக்கடிகள் குறித்து இலங்கை அரசியல் கட்சிகள் பல, கவலை தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நெருக்கடி நிலைமை தொடர்பான விவாதத்தின் போதே அரசியல் கட்சிகளினால் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முஸ்லிம் காங்ரஸ்கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் யாழ். குடாநாட்டில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்தனர். வடக்குக்கிழக்குப் பிரதேசத்தில் எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் நிரந்தர தீர்வு காணமுடியாது எனவும் தெரிவித்தனர்.

இவர்களுக்குப் பதில் அளித்துப் பேசிய பாதுகாப்பு இணை அமைச்சர் றஞ்சன் விஜேயரட்னா மக்களுக்கான பாதுகாப்பு அதிகரித்திருக்கிறது எனக்குறிப்பிட்பிட்டார்.

## கடைக்குச் சென்றவர் காயம்

(செட்டிக்குளம்)

வவுனியா செட்டிக்குளப்பகுதியில் கடந்த 23ஆம் திகதி காலை 11மணிக்கு இ இராசலிங்கம் (38) என்பவர் கடையில் பொருட்கள் வாங்கச் சென்றபோது காவலில்நின்ற இராணுவத்தினர் சுட்டதில் காயமடைந்தார். (ம)

## கிழக்கு மோதல்களில் மூன்று புலிகள் வீரமரணம்

(மட்டக்களப்பு)

வெள்ளாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடந்த 20 ஆம் திகதி ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மைக்கல்ராஜ் (சின்னத்தம்பி-வினாயகமூர்த்தி கோவில் போரைதீவு) என்பவர் வீரமரணமடைந்துள்ளார். இச்சம்பவத்தில் தங்கராஜா மகேந்திரன் என்ற பொதுமகனும் மரணமானார்.

அதே தினம் 40 ஆம் கொலனியில் விடுதலைப் புலிகள் காவல் கடமையில் நின்றபோது வந்த இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் முகிலன் (பத்தன் - பறகாமம்) வீரமரணமடைந்தார்.

கடந்த 21 ஆம் திகதி தளதாலளையில் இராணுவத்தினருடனான மோதலில் கமால் (சின்னையா சபாரத்தினம் கோயில் போரைதீவு) என்பவர் விரமரணமடைந்துள்ளார். (ம)

## மானிப்பாயில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் நள்ளிரவு சுமார் ஒரு மணித்தியாலம் வரை வைத்தியசாலை மீதும் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள வீடுகள், கடைகள், தேவாலயங்கள் ஆகியவற்றின் மீது ஹெலிக்கொப்ரர் தொடர்ச்சியாகத்துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

ஹெலிக்கொப்ரரில் இருந்து வைத்தியசாலையைச் சூழவுள்ளவீதிகளின் மேல் 'கிரனைட்' குண்டுகள் வீசியதனால் வீதிகள் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

இத்தாக்குதல் நடைபெற்ற சமயம் ஆபத்தான நோயாளி ஒருவருக்கு சத்திரசிகிக்சை நடைபெற்றுக்கொண்டிருந்ததாகவும்' உடனடியாக வைத்தியசாலையின் பாதுகாப்பான ஓர்அறைக்கு சத்திரசிகிச்சைக் கூடம் மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேல் வார்ட்டுக்களில் தங்கியிருந்த நோயாளிகளும் அவசரமவசரமாகக் கீழ் வார்ட்டுகளுக்கு மாற்றப்பட்டனர்.

கடந்த 7ஆம் திகதி இவ் வைத்தியசாலை மீது போர் விமானங்கள் குண்டுகள்வீசித் தாக்கியதைத் தொடர்ந்து செஞ்சிலுவைச்சங்கமும் வைத்தியசாலை நிர்வாகமும் இணைந்து சுகாதார அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தியதும், சில நிபந்தனைகளின் பின் வைத்தியசாலை மீது எவ்வித விமானக்குண்டுத்தாக்குதலும் நடாத்துவதில்லை என்று உறுதி அளிக்கப்பட்டதும் தெரிந்ததே. இதன் பின்னர் கடந்த 11 ஆம் திகதியும், நேற்றுமுன்தினமும் இவ்வைத்தியசாலை தாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்து, யாழ். வைத்திய அதிகாரியும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வடபிரதேசத் தலைவருமான வைத்திய கலாநிதி தெய்வேந்திரம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வடபிரதேசக் கிளையுடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியுள்ளார். (மா)

## நள்ளிரவுத்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

7பேர் படுகாயமடைந்தனர். இரு வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

பொம்மைவெளியைச் சேர்ந்த எஸ். எச். உஸ்மான் (43வயது)ஜமாலியா(13வயது) ஜனூரியா (11வயது) தமீன் (37வயது) ஆறுகால்மடம் (ஆனைக்கோட்டை) சேர்ந்த பூ. நிர்மலராஜ் (16வயது) சோமூ.செல்வராணி(25வயது) யும் இவரது பாட்டியார் நா. கனகம்மா (65 வயது) ஆகியோர் படுகாயமடைந்தவர்களாவர்.

இத்தாக்குதல் பரவலாகத் தொடர்ந்து நீடித்ததால் வெகு சிரமப்பட்டே காயமடைந்தவர்களை மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## ஹெலி தாக்கி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் அந்த படகில் வந்து கொண்டிருந்த மீனவர்கள் கடலுக்குள் பாய்ந்தனர் இருந்தும் மரியதாஸ் (28) பொலிகண்டி, கோவிந்தராஜா (48) இராமேஸ்வரம், சுப்பையா (42) இராமேஸ்வரம் ஆகிய மூவர் காயமடைந்தனர் இவர்கள் மூவரும் பின்னர் ஹோலி குரொஸ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

இவர்கள் வந்த படகு சிறிய சேதமுற்று இருந்தது. பின் மண்ணித்தலை முனையை அண்டிய பகுதிகளில் கடற்தொழில் செய்து வந்த இளைஞர்கள் நடுக்கடலில் நின்ற படகை மீட்டுவந்தனர் (லோ)

## காரைநகர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகள் தெரிவிக்கின்றன.

### மாங்குளத்தில் பெரும்சேதம்

வடபகுதியில் மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குட்பட்டுள்ளதாகவும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளதாக நேற்றுமாலை இந்திய வானொலி தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

## ஊர்காவற்றுறை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் போர்விமானங்களும், ஹெலிகொப்ரரும்நடத்தியதாக்குதல்களினால்வீடுகள், கடைகள் மற்றும் கட்டடங்கள் பலவும் தரைமட்டமாகியுள்ளன.

வேலணை மக்கள் கடை, விவசாய ஆராட்சி நிலையம் கிராமிய நீதிமன்றம் என்பன குண்டு வீச்சால் தரைமட்டமாகின.

வேலணையில் இருந்து மக்கள் வெளியேறி புங்குடுதீவு நோக்கிக் கால் நடையாகச் சென்று கொண்டிருக்கின்றனர்

## வியாபாரிகள் அச்சம்

கேரதீவு - சங்குப்பிட்டி இறங்குதுறையில் கடந்த 4 நாட்களாக இத்துறையில் நிற்கும் பயணிகள் மீது ஹெலி காட்டுமிராண்டித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகின்றது. கூடுதலாகப் பூநகரியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அரிசி வியாபாரம் செய்யும் வியாபாரிகள் தற்பொழுது இத்துறையால் பிரயாணம் செய்வதற்கு அஞ்சுகின்றனர்.

## சத்தியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ம)

## நெல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏறி தற்போது 1300 ரூபாவுக்கு மேல் விற்பனையாகின்றது.

இதேபோல் 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு மூடை நெல் படிப்படியாக விலை உயர்ந்து தற்போது 700 ரூபாவரை விற்பனையாகிறது. (49)

விமானப்படைத் தாக்குதலால் சரவணை. சுருவில் பகுதிகள் ஒரே புகை மண்டலமாகக் காட்சி அளிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்

### திரு முத்துமகாதேவன்

சுதுமலை தெற்கைச்சேர்ந்த முத்துமகாதேவன் காலமானார். இவர் வள்ளிநாயகிதேவி (ப.நோ.கூ. சங்கம். தெல்லிப்பளை) யின் அன்புக்கணவரும் திருச்செந்தூரன், விஜிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சிதமணி, தேவு ஆகியோரின் சகோதரனுமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் அளவெட்டி வடக்கில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அ. பொன்னம்பலம்

(B/1351)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.